வட இலங்கை சங்கீத சபை பரீட்சைக்கான

# பரத நாட்டியம்

## வினா விடை

பகுதி - 1

புதிய பாடத்திட்டத்திற்கும் அமைவானது
ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரை



தொகுப்பாசிரியர்

Selvi Tharangini
Edaikuruchchi
Varani

வட இலங்கை சங்கீத சபை பரீட்சைக்கான

# பரத நாட்டியம்

## வினா விடை

### பகுதி - 1

**புதிய பாடத்திட்டத்திற்கும் அமைவானது**
**ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரை**




தொகுப்பாசிரியர்

**Selvi Tharangini**
**Edaikuruchchi**
**Varani**

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | :- | 1998 பங்குனி |
| பதிப்புரிமை © | :- | ஆசிரியருக்கே |
| பக்கங்கள் | :- | 30++ |
| அளவு | :- | 148mm X 210 mm |
| விலை | :- | 73/= |
| கொம்பியூட்டர் டைப்செற்றிங், அச்சுப்பதிப்பு | :- | **TelePrint (Pvt) Ltd.,** 22-1/1, Galle Road, Dehiwela, Sri Lanka. Tel : 739421 |


# ஆண்டு - 6

**சுருக்கமாக விடை தருக**

(1) நடனத்தின் அதிபதி யார்?
**நடராஜன்**

(2) பரத நாட்டியம் தோன்றிய நாடு எது?
**இந்தியா**

(3) பாவம், ராகம், தாளம் இவைகளை தன்னுள் கொண்டமைந்த சாஸ்திரீய நடனம் எது?
**பரத நாட்டியம்**

(4) சிவனின் முன் பரத நாட்டியத்தினை அரங்கேற்றிய முனிவர் யார்?
**பரத முனிவர்**

(5) நடனத்தின் இலட்சணங்களைத் தருக?
**பாவம், இராகம், தாளம்**

(6) பரத முனிவர் எங்கு பரத நாட்டியத்தை அரங்கேற்றினார்?
**கைலயங்கிரியில்**

(7) திரிசூலத்தை தாங்கியிருக்கும் இறைவன் யார்?
**சிவன்**

(8) சிவன் 63 திருவிளையாடல்களை நிகழ்த்திய தலம் எது?
**மதுரை**

(9) திரிப்பதாக முத்திரை பிரயோகிக்கப்படாத நாட்டடவுகளின் எண்ணிக்கை எத்தனை?
**2**

(10) அடவுகள் ஆரம்பிக்கப்படும் போது பாதங்களின் நிலை என்ன?
**அரைமண்டி**

(11) ஸ்வரங்களினால் அலங்கரிக்கப்பட்டு மனத்திற்கு இன்பம் தருவது எது?
**இராகம்**

(12) அபூர்வ முத்திரைகள் மூன்று தருக?
**பிரளம்பம், திரிலிங்கம், காங்கூலபேதம்**

(13) தியான சுலோகத்தில் போற்றப்படும் சிவனின் ஆபரணங்கள் எவை?
**சந்திரன், நட்சத்திரங்கள்**

(14) தேவர்களின் அதிபதி யார்?
**இந்திரன்**

(15) கிண்கிணியின் மறு பெயர்கள் இரண்டினைத் தருக?
**(1) ஆதிதெய்வம் (2) தாராகணம்**

(16) நுண்கலையின் மறு பெயரினைத் தருக?
**கவின் கலை**

(17) நடனம் எக்கல்வித்துறையைச் சார்ந்தது?
**நுண்கலை**

(18) தமிழ்ப்பாடசாலையில் கற்பிக்கப்படும் நடனம் எது?
**பரத நாட்டியம்**

(19) "ஆங்கிகம், புவனம்" என ஆரம்பிக்கப்படும் சுலோகம் எது?
**தியான சுலோகம்**

(20) ஏழாம் தட்டடவின் சொற்கட்டினைத் தருக?
**தெய்தெய் தத்தத் தெய்தெய்தாம்**

(21) ஆசீர்வாதத்தினைக் குறிக்கப் பயன்படும் முத்திரை எது?
**பதாகம்**

(22) நடனப் பயிற்சியின் போது பயன் படுத்தப்படும் உபகரணத்தின் பெயர் என்ன?
**தட்டுக்கழி**

(23) பாணாசுரனின் மகளின் பெயர் என்ன?
**உஷை**

(24) நமஸ்காரத்தில் பிரயோகிக்கப்படும் முத்திரைகளின் ஒழுங்கினைத் தருக?
**கடகாமுகம், சிகரம், சதுரம், அஞ்சலி**

(25) காங்கூல முத்திரையின் மோதிர விரலை நீட்டினால் உருவாகும் முத்திரை எது?
**பத்மகோசம்**



(26) தியான ஸ்லோகத்தில் ஆஹார்யம் என்பதன் பொருள் என்ன?
**சிவனின் ஆபரணம்**

(27) ரூபகதாளத்தில் அமைந்துள்ள தட்டடவுகள் எவை?
**மூன்றாம் தட்டடவு**
**எட்டாம் தட்டடவு**

(28) நான்கு வகை வேதங்களைத் தருக?
**(1) இருக்கு**
**(2) யசுர்**
**(3) சாமம்**
**(4) அதர்வம்**

(29) நடனத்தின் தோற்றம் பற்றிய இரு வரலாறுகள் எவை?
**(1) புராண வரலாறு**
**(2) உலகியல் வரலாறு**

(30) உலகியல் வரலாற்றின் வேறு பெயரினைத் தருக?
**லௌகீக வரலாறு**

(31) பரத நாட்டியத்தினை ஐந்தாம் வேதமாகத் தொகுத்தவர் யார்?
**பிரம்ம தேவர்**

(32) காலத்தால் முற்பட்ட வேதம் எது?
**இருக்கு வேதம்**

(33) காலத்தால் பிற்பட்டதும், மாந்திரிகம் சம்பந்தப்பட்டதுமான வேதம் எது?
**அதர்வம்**

(34) பரத நாட்டியத்தின் ஆரம்ப அப்பியாசம் எது?
**தட்டடவு**

(35) நடனத்தினை கற்பதன் நோக்கங்கள் நான்கு தருக?
**(1) உடல் உறுதியடைய**
**(2) உள்ளம் வளர்ச்சியடைய**
**(3) அழகுணர்ச்சியினைப் பெற்றுக் கொள்ள**
**(4) பண்பாட்டு விழுமியங்களை அறிந்து கொள்ள**

(36) நாட்டடவுகளில் கூடுதலாக வரும் முத்திரைகள் எவ் வகையைச் சார்ந்தவை?
**ஒற்றைக் கை முத்திரை வகையைச் சார்ந்தவை**

(37) தியான சுலோகத்தில் ஆங்கிகம் எவ்முத்திரை மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது?
**பிரளம்பம்**

(38) தியான சுலோகத்தில் சந்திரன், நட்சத்திரம் என்பவற்றைக் குறிப்பிடப் பயன்படும் முத்திரைகளை முறையாக தருக?
**சந்திரன் - அலபத்மம்**
**நட்சத்திரம் - காங்கூலபேதம்**

(39) தியான சுலோகத்தில் நட்சத்திரத்தினைக் குறிப்பிடும் சமஸ்கிருதப் பெயரினைத் தருக?
**தாராதி**

(40) இலங்கையில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மொழிமூல நுண்கலைக் கல்லூரியின் பெயரினைத் தருக?
**யாழ் / இராமநாதன் நுண்கலைக் கல்லூரி**

(41) ஆதி தாளத்தின் அங்கத்தினையும், மொத்த அட்சரத்தினையும் தருக?
**அங்கம் - $1_4$ $O_2$ $O_2$**
**அட்சரம் - 8**

(42) நாட்டடவுகள் என்ன தாளத்தில் அமைந்துள்ளன?
**ஆதிதாளத்தில்**

(43) பிரம்மா நவரஸங்களை எவ்வேதத்தில் இருந்து தொகுத்தார்?
**அதர்வ வேதத்தில் இருந்து**

(44) மிருகஷீர்ஷ முத்திரையின் கட்டை விரலை சேர்த்துப் பிடித்தால் உருவாகும் முத்திரை எது?
**ஹம்சபக்சம்**

(45) "மந்திக் காரன்டி அம்மாடி" என்னும் அபிநயப்பாடலில் வரும் மந்திரக்காரன் யார்?
**முருகன்**



## ஆண்டு - 7

(46) மன்னார் பிரதேசத்திற்கு உரிய நடனம் எது?
**கூத்து**

(47) சிநேகிதத்திற்குப் பயன்படுத்தும் இரட்டைக்கை முத்திரை எது?
**கீலகௌ**

(48) நடனபேதங்கள் எத்தனை வகைப்படும், அவற்றினைத் தருக?
**3 வகைப்படும்**
**(1) நிருத்தம்**
**(2) நிருத்தியம்**
**(3) நாட்டியம்**

(49) "தெய்ஹத் தெய்ஹி" அடவு, "குத்து மெட்டு அடவு" எனக் கூறுவதன் காரணம் என்ன?
**பாதங்களை குத்தி மெட்டுவதனால்**

(50) மூன்றாம் "தாத் தெய் தெய்த" அடவில் பயன்படுத்தப்படும் முத்திரை எது?
**டோலா ஹஸ்தம்**

(51) ஒரே விதமான பாத அசைவினையும், வேறுபட்ட கை அசைவினையும், கொண்ட அடவு எது?
**குத்து மெட்டடவு**

(52) குத்து மெட்டடவில் கூடுதலாகப் பயன்படுத்தப்படும் இரண்டு முத்திரைகள் எவை?
**(1) கடகா முகம்**
**(2) அலபத்மம**

(53) நடன அபிநயங்கள் பற்றிக் கூறும் நூல் எது? அந் நூலை இயற்றியவர் யார்?
**"அபிநயதர்ப்பணம்", "நந்திகேஸ்வரர்"**

(54) "சங்கீத சாராம்ருதம்" என்னும் நூலை இயற்றியவர் யார்?
**மராட்டிய மன்னர் துளஜா மகாராசா**

(55) "நாட்டிய சாஸ்திரம்" என்னும் நூலின் மறுபெயரினைத் தருக? அந் நூலை இயற்றியவர் யார்?
**"பரதசாஸ்திரம்", பரத முனிவர்**

(56) பரத நாட்டியம் சம்பந்தமாக முதல் முதல் தோற்றம் பெற்ற நூல் எது? அது எப்போது தோற்றம் பெற்றது?
**பரத சாஸ்திரம், கி.மு. 1ம் நூற்றாண்டில்**

(57) "நாட்டிய சாஸ்திரம்" என்னும் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?
**மனமோகன்**

(58) "பூக் கூடைக்கு" பிரயோகிக்கப்படும் இரட்டைக் கை முத்திரையினைத் தருக?
**புஷ்பபுடஹ**

(59) இலங்கையரால் உருவாக்கப்பட்ட பரத நாட்டியம் சம்பந்தமான இரு நூல்களைத் தருக?
**(1) மதங்க சூளாமணி**
**(2) பரதக் கலை**

(60) மதங்க சூளாமணி என்னும் நாட்டிய நூலை இயற்றிய இலங்கையர் யார்?
**மட்டக்களப்பினை சேர்ந்த விபுலானந்தர்**

(61) பருந்தைக் குறிக்கப் பயன்படும் முத்திரை எது?
**கருடன்**

(62) "நாட்டிய சாஸ்திரம்" என்னும் நூல் எந்த மொழியில் அமைந்துள்ளது?
**சமஸ்கிருத மொழியில்**

(63) குத்தடவின் சொற்கட்டினைத் தருக?
**"தெய்ஹத்தெய்ஹி"**

(64) நட்சத்திரங்களை அதிதேவதையாகக் கொண்ட நடனமாதின் அணிகலன் எது?
**கிங்கிணி**

(65) ரஸபாவங்களை உள்ளடக்கிய நடன பேதம் எது?
**நாட்டியம்**



(66) கருத்தைப் புலப்படுத்தும் கைகளின் அசைவுகளை எவ்வாறு அழைப்பர்?
**முத்திரைகள் என்று அழைப்பர்**

(67) நிருத்தத்திற்கு உயிர் நாடியாக விளங்கும் நடன இலட்சணங்களில் ஒன்றினைக் கூறுக?
**தாளம்**

(68) செவிக்கு நவரஸத்தினைக் கொடுக்கும் நடன இலட்சணங்களில் ஒன்றைத் தருக?
**இராகம்**

(69) நிருத்தியத்திற்கு அடிப்படையாக அமைய வேண்டிய நடன இலட்சணம் எது?
**பாவம்**

(70) ரூபக தாளத்தின் அங்கத்தினையும், மொத்த எண்ணிக்கையினையும் தருக?
**அங்கம் $O_2$ $I_4$**
**மொத்த எண்ணிக்கை - 6**

(71) மனத்தில் உண்டாகும் உணர்ச்சிகளை முகத்தின் மூலம் எவ்வாறு வெளிப்படுத்தலாம்?
**பாவத்தின் மூலம் வெளிப்படுத்தலாம்**

(72) தமிழ் நாட்டிற்குரிய பிரதானமான நடன வகை எது?
**பரதநாட்டியம்**

(73) மத்திய மலைநாட்டிற்குரிய இலங்கையின் சாஸ்திரீய நடனத்தின் பெயரினைத் தருக?
**கண்டிய நடனம்**

(74) மட்டக்களப்பு பிரதேசத்திற்குரிய இரு நடனங்களின் பெயரினைத் தருக?
**நாட்டுக் கூத்து, வசந்தன் கூத்து**

(75) மட்டக்களப்பு பிரதேச நடனமான நாட்டுக்கூத்தின் இரு பெரும் பிரிவுகளைத் தருக?
**1. வடமோடி**
**2. தென்மோடி**

(76) யாழ்ப்பாண மக்களால் பெரிதும் போற்றி நடை முறைப்படுத்தப்படும் இரண்டு சாஸ்திரீய நடனங்கள் எவை?
**பரதநாட்டியம்**
**கதகளி**

(77) கபித்த முத்திரையினை இரட்டைக்கை முத்திரையில் எவ்வாறு அழைப்பர்?
**பேருண்டஹாக்கியஸ்ஷ**

(78) நடன உருப்படிகளில் நிருத்தமும், நிருத்தியமும் சமமாக இடம் பெறும் உருப்படி எது?
**வர்ணம்**

(79) மனத்தில் தோன்றும் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் உறுப்பினைத் தருக?
**முகம்**

(80) கேரளா நாட்டில் தோற்றம் பெற்ற நடனம் எது? எப்போது தோற்றம் பெற்றது?
**கதகளி, 16ம் நூற்றாண்டில்**

(81) இரண்டு பதாக முத்திரைகளை உட்புறமாக இணைக்கும் போது உருவாகும் இரட்டைக் கை முத்திரை எது?
**அஞ்சலி**

(82) பரதக் கலைக்கு சேவையாற்றி "நாட்டியச் செல்வன்" எனப் பெயர் பெற்ற இலங்கையர் யார்?
**ஸ்ரீ ஏரம்பு சுப்பையர்**

(83) "தாதெய் தெய்த" அடவு எத்தனை வகைப்படும்?
**நான்கு வகைப்படும்**

(84) "கந்தஷட்டி" விரதம் எப்போது யாரை வேண்டி அனுஷ்டிக்கப்படும்?
**ஐப்பசி மாதம், முருகனை வேண்டி அனுஷ்டிக்கப்படும்**

(85) "இணைந்த பாம்பினை"க் குறிக்கப் பயன்படுத்தப்படும் இரட்டைக்கை முத்திரை எது?
**நாக பந்தஸ்ய**

(86) "தெய்யாதெய்யி" அடவு எத்தனை வகைப்படும்?
**நான்கு வகைப்படும்**



(87) அரைமண்டியில் இருக்கும் மண்டல பேதத்தினை எவ்வாறு அழைப்பர்?
**ஆயத்தம்**

(88) முதலையைக் குறிப்பதற்குப் பிரயோகிக்கப்படும் முத்திரை எது?
**"ஸ்வஸ்திகம்"**

(89) இரு குழிபதாகக் கைகளை உட்புறமாகச் சேர்த்துப் பொருத்தினால் உருவாகும் ஹஸ்தம் எது?
**கபோதம்**

(90) "நாட்டிய நாடகம்" நடனத்தின் உட்பிரிவுக்குள் எவ்வகையைச் சார்ந்தது?
**நாட்டிய வகையைச் சார்ந்தது**

(91) வார்த்தைகளினால் கருத்தினைப் புலப்படுத்தும் அபிநயம் எது?
**வாச்சிகம்**

## ஆண்டு - 8

(92) கிராமிய நடனங்கள் ஆடப்படும் சந்தர்ப்பங்களைத் தருக?
**1. வேண்டுதலுக்காக**
**2. பொழுதுபோக்கிற்காக**
**3. தொழிலின் போது**

(93) கிராமிய நடனத்தின் மறுபெயர்களைத் தருக?
**1. சுதேச நடனம்**
**2. நாடோடி நடனம்**
**3. பாமர நடனம்**

(94) காடு, மலைகளில் வசிக்கும் சாதியினரால் ஆடப்படும் நடனம் எது?
**குறத்தி நடனம்**

(95) உழவர்களினால் கொண்டாடப்படும் சமய சம்பந்தமான விழா ஒன்றினைத் தருக?
**தைப்பொங்கல்**

(96) தொழில் சம்பந்தமான கிராமிய நடனங்கள் மூன்று தருக?
**1. மீனவ நடனம்**
**2. அரிவு வெட்டு நடனம்**
**3. உழவு நடனம்**

(97) கழுத்தசைவின் சமஸ்கிருதப் பெயரினைத் தருக?
**க்ரிவாபேதம் (கண்டபேதம்)**

(98) "லதாயம்" என்பதன் பொருள் என்ன?
**கொடி**

(99) தாளத்தில் இடம் பெறும் திரியாங்கங்கள் எவை?
**1. லகு 2. திருதம் 3. அனுதிருதம்**

(100) இருபாலாரும் இணைந்து ஆடும் கிராமிய நடனம் எது?
**கரகம்**

(101) கிராமிய நடனத்திற்கு பயன்படுத்தப்படும் வாத்தியம் எது?
**உடுக்கு**

(102) சிரோபேதம் எத்தனை வகைப்படும்?
**9 வகைப்படும்**

(103) கிராமிய நடனங்கள் ஐந்து தருக?
**1. கரகம்**
**2. மீனவ நடனம்**
**3. கோலாட்டம்**
**4. தெருக் கூத்து**
**5. புரவியாட்டம் (பொய்க்கால் குதிரை)**

(104) உள்ளத்து உணர்ச்சியினை முகத்தின் மூலம் வெளிப்படுத்தப் படுவதனை எவ்வாறு அழைப்பர்?
**பாவம்**

(105) "அருவெருப்பு" இதனை வெளிப்படுத்தப் பயன்படும் சிரோபேதம் எது?
**பராவிருத்தம்**

(106) மூக்கிலும், மூக்கின் கீழும் அணியப்படும் அணிகலன்கள் எவை?
**மூக்கில் :- மூக்குத்தி, மூக்கின் கீழ் :- புல்லாக்கு**

(107) "பாணம் விடுதல்" இதனைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் முத்திரை, திருஷ்டி பேதம் என்பனவற்றைத் தருக?
**முத்திரை :- சுகதுண்டம், திருஷ்டி பேதம் :- ஸாசி**

(108) நாட்டியக் கிரமத்தின் படி கை செல்லும் இடத்துக்குச் செல்லவேண்டிய உறுப்பு எது?
**கண்**



(109) மனித உடலில் காணப்படும் திரியாங்கங்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
**3 வகைப்படும்**
**1. அங்கம் 2. பிரதியாங்கம் 3. உபாங்கம்**

(110) "விக்னானாம் நாஷனம்" எனத் தொடங்கும் சுலோகத்தின் பெயரினைத் தருக?
**புஷ்பாஞ்சலி**

(111) "தத் தெய் தாம் தித் தெய்தாம்" என்னும் அடவு என்ன தாளத்தினை கொண்டு அமைந்துள்ளது?
**ஆதி தாளம்**

(112) பாதிச் சந்திரன் போல் அரைவட்டமாக அசைக்கும் கழுத்தின் அசைவினை எவ்வாறு கூறுவர்?
**பரிவர்த்திதம்**

(113) அஞ்சலித்தட்டு, விரல்த்தட்டு, உள்ளங்கைத்தட்டு என்பன அமைந்துள்ள கிராமிய நடனம் எது?
**கும்மி**

(114) சுளகு நடனம் எவ் வகையைச் சார்ந்த நடனம்?
**கிராமிய நடன வகையை**

(115) அபிநயங்கள் எத்தனை வகைப்படும்? அவற்றினைத் தருக?
**நான்கு வகைப்படும்**
**1. ஆங்கிக அபிநயம்**
**2. வாச்சிக அபிநயம்**
**3. சாத்விக அபிநயம்**
**4. ஆஹார்ய அபிநயம்**

(116) சாத்விக அபிநயத்தில் உணர்ச்சியின் போது எத்தனை வகையான பாவங்கள் வெளிப்படுத்தப்படுகின்றது?
**8வகை**

(117) அவை எவை?
**1. மெய் சிலிர்த்தல்**
**2. கண்ணீர் விடுதல்**
**3. முகத்தின் நிறம் மாறுதல்**
**4. ஸ்தம்பித்தல்**
**5. வியர்த்தல்**
**6. நடுங்குதல்**
**7. குரல் மாறுதல்**
**8. மயங்குதல்**

(118) பக்தியுடன் வேண்டுதலுக்காக ஆடப்படும் கிராமிய நடனங்கள் எவை?
**1. காவடி 2. கரகம்**

(119) பரத நாட்டியம் ஒரு பாடமாக எவ் ஆண்டு பாடத்திட்டத்துக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டது?
**1972**

(120) பச்சைமணி. பவழமணி செருகிய கொண்டையும், இடுப்பில் கூடையும் கொண்டுள்ள கதாப்பாத்திரம் எது?
**குறத்தி**

(121) "அரங்கேற்றம்" என்பதன் சமஸ்கிருதப் பெயரினைத் தருக?
**"ரங்கப் பிரவேசம்"**

(122) நடனப் பயிற்சியின் போது பயன்படுத்தப்படும் தட்டுக்களி எதன் மூலம் செய்யப்பட்டது?
**மரத்தின் மூலம்**

(123) பரத நாட்டிய நிகழ்ச்சியின் போது நட்டுவனாரால் பயன்படுத்தப்படும் தாளத்தின் பெயரினைத் தருக?
**நட்டு வாங்கத் தாளம்**

(124) நடனமாடும் போது நடனமாதினால் அணியப்படும் கிங்கிணி எதனால் செய்யப்பட்டது?
**உலோகம்**

(125) "பரதக்கலை' என்னும் நூலை இயற்றிய இலங்கையர் யார்?
**வி. சிவச்சாமி**

(126) "சிலப்பதிகாரம்" என்னும் நூல் யாரால் இயற்றப்பட்டது?
**இளங்கோவடிகளால்**

(127) சிவன் ஆடிய முக்கியமான தாண்டவங்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
**7 வகைப்படும்**

1. **ஆனந்த தான்டவம்**
2. **கௌரி தாண்டவம்**
3. **ஸந்தியா தாண்டவம்**
4. **ஊர்த்துவ தாண்டவம்**
5. **களிகா தாண்டவம்**
6. **ஸம்கார தாண்டவம்**
7. **முனி தாண்டவம்**

(128) ஆண்மையும், மிடுக்கும் நிறைந்த ஆண்களுக்குரிய தாண்டவ நடனத்தை சிவனிடம் இருந்து கற்றுக் கொண்ட முனிவர் யார்?
**தண்டு முனிவர்**

(129) ஆடை ஆபரணங்களால் கருத்தைப் புலப்படுத்தும் அபிநயம் எவ்வகையைச் சார்ந்தது?
**"ஆஹார்யம்" என்னும் அபிநய வகையைச் சார்ந்தது**



## ஆண்டு - 9

(130) மண்டியடவிற்குரிய சொற்கட்டினைத் தருக?
**"தாங்கிடு தத்தத்தின்ன"**

(131) மண்டியடவு கொண்டமைந்துள்ள தாளத்தினைத் தருக?
**ரூபகதாளம்**

(132) இலங்கையின் மத்திய மலை நாட்டிற்குரிய நடனம் எது?
**கண்டிய நடனம்**

(133) தேவஹஸ்தங்களுள் ஒரே முத்திரையினை கொண்டமையும் இரு தேவஹஸ்தங்கள் எவை?
**வினாயகர், லக்சுமி**

(134) அடவுகளுள் "ததிகிணதொம்" என்னும் அடவு அமைந்துள்ள தாளம் எது?
**ரூபக தாளம்**

(135) மண்டியடவு செய்யும் போது காணப்படும் மண்டல பேதத்தினைக் கூறுக?
**மோடிதம்**

(136) நாட்டியப்பாத்திரம் வணங்கும் அரங்க தேவதையின் இலட்சணங்களைத் தருக?
1. **வெற்றியைத் தருபவள்**
2. **நவரஸம் உருவானவள்**
3. **அழகானவள்**

(137) கோர்வைகளின் இறுதியில் இடம் பெறும் தீர்மானம் எச் சொற் கட்டைக் கொண்டு அமைந்திருக்கும்?
**மிருதங்கச் சொற்கட்டை**

(138) திரியாங்கங்களையும் எடுத்துக் கொள்ளும் அபிநயம் எது?
**ஆங்கிகம்**

(139) நாட்டடவுப் பயிற்சியின் போது இடம் பெறும் மண்டல பேதத்தினைத் தருக?
**"பரேங்கன"**

(140) “மயிலின்’ அசைவினைக் குறிக்கப் பிரயோகிக்கும் கண்ட பேதத்தினை குறிப்பிடுக?
**பிரகம்பிதச்ச**

(141) “பிரிவு” என்னும் கருத்தினை வெளிப்படுத்த பிரயோகிக்கும் அஸம்யுத ஹஸ்தம் எது?
**கத்தரீமுகம்**

(142) அலாரிப்பு செயல் முறையின் போது எத்தனையாம் தத் தெய் தாஹா அடவு இடம் பெறுகின்றது?
**1ம் தத்தெய்தாஹா அடவு**

(143) பிரம்மாவிற்குரிய வாகனம் எது?
**அன்னம்**

(144) பலமணி நேரத்திற்கு முன்பே ஒப்பனை ஆரம்பிக்கப்படும் நடனம் எது?
**கதகளி**

(145) “கதகளி” எந்த மாநிலத்திற்குரிய நடனம்? இதற்கு பிரயோகிக்கும் வாத்தியம் எது?
**கேரளா மாநிலத்திற்குரியது, சென்டை**

(146) ஜாதி ஹஸ்தங்கள் எத்தனை வகைப்படும்? அவற்றினைத் தருக?
**நான்கு வகைப்படும்.**
**அவையாவன:-** **1. பிராமணர்** **3. வைஷியர்**
**2. ஷத்திரியர்** **4. சூத்திரர்**

(147) “ஷகட” முத்திரையினை எடுத்துக் கொள்ளும் ஜாதி எது?
**ராக்ஷதர்**

(148) வலது கையில் திரிப்பதாகமும், இடது கையில் காங்கூல முத்திரையும் கொண்டமையும் தேவஹஸ்தத்தினைத் தருக ?
**அக்கினி**

(149) “விஷ்ணு” ஹஸ்தத்தினை எடுத்துக் கொள்ளும் வேறு ஒரு தேவ ஹஸ்தத்தினைத் தருக?
**இந்திரன்**

(150) “மோடிதம்” என்னும் “மண்டபேதம்” உள்ளடக்கிய அடவு எது?
**மண்டியடவு**



(151) “ஏவம்கிருத்துவ” எனத் தொடங்கும் ஸ்லோகம் எது?
**நாட்டியக் கிரமம்**

(152) ‘யதோ ஹஸ்த ததோ த்ருஷ்டி” என்பதன் கருத்து என்ன?
**கைகள் அசையும் இடத்து கண்கள் செல்ல வேண்டும்**

(153) “தண்டு முனிவர்” தவம் செய்த இடம் எது?
**திருக் கைலாயமலை**

(154) “நாட்டியக் கிரமம்” என்றால் என்ன?
**ஒரு நடனமாதுவினால் நடனம் ஆடப்படவேண்டிய ஒழுங்கு முறையினைக் கூறுவது**

(155) ஒரு நாட்டியப் பெண்ணின் உடலான பாத்திர சொருபம் எதனைக் குறிக்கின்றது?
**1. தலை - சிவன்**
**2. இடையின் கீழ் - பிரம்மா**
**3. இடையில் இருந்து தோள்வரை - விஷ்ணு**

(156) “நாட்டியக் கிரமம்” நாட்டியம் எவ்வாறு செய்யப்பட வேண்டும் எனக் கூறுகின்றது?
**நிருத்தியம் செய்து, அதற்கு பின் நிருத்தியத்துடன், வாய்ப்பாடு, அபிநயம், பாவம், தாளம் என்பன சேர்த்து நாட்டியம் செய்ய வேண்டும் எனக் கூறுகின்றது**

(157) திரியாங்கத்தின் ஒரு பிரிவான “அங்கம்” என்னும் பிரிவிற்குள் அடங்கும் ஆறு உறுப்புகள் எவை?
**1. தலை**
**2. கைகள்**
**3. மார்பு**
**4. பக்கங்கள்**
**5. இடை**
**6. பாதங்கள்**

(158) திரியாங்கத்தின் ஒரு பிரிவான “பிரதியாங்கம்” என்னும் பிரிவிற்குள் அடங்கும் ஆறு உறுப்புக்கள் எவை?
**1. தோள்ப்பட்டைகள்** **4. வயிறு**
**2. புயங்கள்** **5. தொடைகள்**
**3. முதுகு** **6. முழங்கால்கள்**

(159) திரியாங்கத்தின் ஒரு பிரிவான "உபாங்கம்" என்னும் பிரிவிற்குள் அடங்கும் பன்னிரண்டு உறுப்புகள் எவை?

| | | |
|---|---|---|
| **1. கண்கள்** | **5. தாடை** | **9. நாடி** |
| **2. கண்புருவங்கள்** | **6. பற்கள்** | **10. முகம்** |
| **3. கண்விழிகள்** | **7. கன்னங்கள்** | **11. தோள்கள்** |
| **4. மூக்கு** | **8. உதடு** | **12. நாக்கு** |

(160) "ஸபா கல்பதருர் பாதி வேதசா" என ஆரம்பிக்கும் சுலோம் எது?
**சபா இலட்சணம்**

(161) "மருங்குக்குக் கீழ் அயனும்" என்னும் மகாபாரத சூடாமணி ஸ்லோகம் எதனைக் குறிப்பிடுகின்றது?
**பாத்திர சொருபத்தினை**

(162) "தாஹத்த ஜெம்தரிதா" என்னும் அடவு என்ன தாளத்தில் அமைந்துள்ளது?
**ரூபகதாளத்தில்**

(163) "தாஹத்த ஜெம்தரிதா" என்னும் அடவினை வேறு எவ்வாறு அழைக்கலாம்?
**தெய் தெய் திதி தெய் தா**

(164) ஒவ்வொரு ஜாதியினருக்கும் உரிய குறிப்பிட்ட தொழிலினைத் தருக?

1. **பிராமணர் :- வேள்வியை வேட்டலும் வேட்பித்தலும்**
2. **ஷத்திரியர் :- பகைவரிடம் இருந்து நாட்டைக் காத்தல்**
3. **வைசியர் :- உணவு உற்பத்தியில் ஈடுபடல்**
4. **சூத்திரர் :- அடிமைத் தொண்டு செய்தல்**

(165) "தத் தெய் தாஹா" என்னும் அடவு எத்தனை வகைப்படும்?
**நான்கு வகைப்படும்**

(166) "தத் தெய்தாஹா" என்னும் அடவில் கூடுதலாகப் பிரயோகிக்கப்படும் முத்திரை எது?
**திரிப்பதாகம்**

(167) சங்கு ஊதுதல், சனக் கூட்டம், வயிறு என்பவற்றைக் குறிப்பிட பிரயோகிக்கப்படும் சம்யுதஹஸ்தம் எது?
**கற்கடகம்**



(168) ஜதிகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
**ஐந்து வகைப்படும்.**

**அவையாவன :-**

1. **திஸ்ரஜதி**
2. **சதுஸ்ரஜதி**
3. **கண்ட ஜதி**
4. **மிஸ்ர ஜதி**
5. **சங்கீர்ண ஜதி**

(169) மயக்கம் இதற்கு பிரயோகிக்கும் "சிரோ திருஷ்டி பேதம்" என்பவற்றைத் தருக?
**சிரோபேதம் - ஆலோலிதம்**
**திருஷ்டிபேதம் - ஆலோகிதம்**

(170) கண்டபேதங்களில் ஒன்றான "திரசீனம்" என்னும் கழுத்தசைவின் செயல் முறையினைக் கூறுக?
**பாம்பு ஊர்வது போன்று இருபக்கங்களுக்கும் கழுத்தை அசைத்து உயர்துதல்**

(171) இரண்டு பக்கங்களிலும் உள்ள பொருட்களை குறிக்கப் பிரயோகிக்கப்படும் "திருஷ்டி" பேதத்தினைத் தருக?
**ப்ரலோகிதம்**

(172) நாட்டை பகைவர்களிடம் இருந்து பாதுகாக்கும் ஜாதி ஹஸ்தத்தின் பெயரினையும், முத்திரையினையும் தருக?
**ஷத்திரியர்**
**வலது - சிகரம்**
**இடது - பதாகம்**

(173) ஜாதி ஹஸ்தத்தில் இடம்பெறும் ஷத்திரிய ஹஸ்தத்தின் வலது சிகரத்தினை கட்வா முத்திரையாக மாற்ற உருவாகும் தேவஹஸ்தம் எது?
**யமன்**

(174) "யதோதிருஷ்டி ததோ மனசு" என்பதற்கு நாட்டியக் கிரமம் கூறும் விளக்கத்தினைத் தருக?
**நடனம் செய்பவர், நடனம் ஆடும் போது கண் எங்கு செல்கின்றதோ அங்கு மனமும் செல்ல வேண்டும் எனக் கூறுகின்றது**

(175) பார்வதியினால் உஷைக்கு கற்றுக் கொடுக்கப்பட்ட "லாஸ்ய" நடனத்தின் இரு பெரும்பிரிவுகள் எவை?

**1. அவரித்தா** **2. சுரித்த**

(176) "லாஸ்ய" நடனத்தின் ஒரு பிரிவான "அவரித்தா" நடனம் என்றால் என்ன?

**இது ஆண்களின் மனத்தை வசீகரிப்பதற்காக தேவதாசிகளினால் ஆடப்படும் நடனம் ஆகும்**

(177) "லாஸ்ய" நடனத்தின் ஒரு பிரிவான "சுரித்த" நடனம் என்றால் என்ன?

**நாயகனுக்கும், நாயகிக்கும் இடையே உள்ள காதலின் தன்மையினை விளக்குவது**

## ஆண்டு - 10

(178) இசைக் கச்சேரிகளில் பிரயோகிக்கப்படும் இசைக்கருவிகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

**நான்கு வகைப்படும்.**

**அவையாவன:-**

**1. தோல் கருவி** **3. துளைக் கருவி**

**2. நரம்புக் கருவி** **4. கஞ்சற் கருவி**

(179) சப்த தாளங்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

**ஏழு வகைப்படும்.**

**அவையாவன : -**

**1. துருவதாளம்** **5. அடதாளம்**

**2. மட்டிய தாளம்** **6. ஜெம்பைதாளம்**

**3. ரூபகதாளம்** **7. ஏக தாளம்**

**4. திரிபுடை தாளம்**

(180) இரு கைகளிலும் ஒரே முத்திரைகளைக் கொண்டமைந்த தஸாவ தாரங்கள் எத்தனை? அவை எவை?

**ஆறு அவதாரங்கள்.**

**அவையாவன:-**

**1. மத்ஸ்ய** **4. நரசிம்ஹ**

**2. கூர்ம** **5. வாமன**

**3. வராஹ** **6. கிருஷ்ண**



(181) தசாவதாரங்களுள் மகாவிஷ்ணு எதிர்காலத்தில் எடுக்க இருக்கும் அவதாரம் எது?

**கல்கி**

(182) சங்கு, சக்கரத்தை ஏந்தியுள்ள கடவுள் யார்? அவரின் தொழில், முத்திரை என்பவற்றைத் தருக?

**விஷ்ணு, தொழில் :- காத்தல்**

**முத்திரை :-**

**வலது - திரிப்பதாகம்**

**இடது - திரிப்பதாகம்**

(183) மதுரை மாநகரை எரித்தபோது கண்ணகி இருந்த மனநிலைக்கு ஒப்பான ரஸம் எது?

**கோபரஸம்**

(184) தாளதசப்பிராணன்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

**தாளதசப் பிராணன்கள் பத்து வகைப்படும்.**

**அவையாவன:-**

**1. காலம்** **6. ஜாதி**

**2. மார்க்கம்** **7. களை**

**3. கிரியை** **8. லயம்**

**4. அங்கம்** **9. ஜதி**

**5. க்ரகம்** **10. பிரஸ்தாரம்**

(185) பரத நாட்டிய ஆரம்ப அடவுப் பயிற்சிகளை ஒழுங்குமுறையில் வகுத்துத் தந்தவர் யார்?

**தஞ்சை நால்வருள் ஒருவரான பொன்னையா பிள்ளை**

(186) தஞ்சை நால்வருள் ஒருவரான பொன்னையா பிள்ளை அவர்கள் அடவுகளை எத்தனை வகையாகப் பகுபாடு செய்தார்? அவை எவை?

**பத்து வகையாகப் பாகுபாடு செய்தார். அவையாவன:-**

**1. தட்டடவு** **6. அறுதி அடவு**

**2. நாட்டடவு** **7. நடைஅடவு**

**3. குத்துமெட்டடவு** **8. மெட்டடவு**

**4. ஜெதி அடவு** **9. மெய்யடவு**

**5. தட்டுமெட்டடவு** **10. முடிவடவு**

(187) நடனக்கலைக்கு சேவையாற்றிய தஞ்சை நால்வர் எனச் சிறப்பித்து கூறப்படுபவர் யார்?

**1. பொன்னையா**

**2. சின்னையா**

**3. வடிவேலு**

**4. சிவானந்தம்**

(188) ஒரு நடனக்கச்சேரியில் இடம் பெறவேண்டிய நடன உருப்படிகளை ஒழுங்கு முறையில் வகுத்துத்தந்தவர் யார்?
**தஞ்சை நால்வருள் ஒருவரான பொன்னையாபிள்ளை**

(189) "பரதசிரேஸ்டர்" எனப் பட்டம் பெற்று, ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரால் கௌரவிக்கப்பட்டவர் யார்?
**தஞ்சை நால்வர்**

(190) சுப்ராயன் என்பவரின் இரண்டாவது புதல்வன் யார்? இவர் எவ்வாண்டு எங்கு பிறந்தார்?
**பொன்னையா, 1804ம் ஆண்டு, தென் இந்தியாவில் தஞ்சாவூரில் பிறந்தார்**

(191) தஞ்சை நால்வருள் எவர் மேலைத்தேச நரம்புக் கருவியான வயலினை (பிடில்) கர்நாடக சங்கீதத்திற்கு முதன் முதலில் பிரயோகித்துக் காட்டினார்?
**வடிவேலு**

(192) தஞ்சை நால்வரின் குருவினதும், தந்தையினதும் பெயரினைத் தருக?
**குருவின் பெயர் - ஸ்ரீ முத்துஸ்வாமி தீஷிதர்**
**தந்தையின் பெயர் - சுப்ராயன்**

(193) தென் இந்தியாவில் புகழ்பெற்ற நாட்டிய மேதைகளும், இசை வல்லுநர்களும் அவதரித்த இடம் எது?
**தஞ்சாவூர்**

(194) தசாவதாரத்தில் ஏகபத்தினி விரதம் பூண்ட அவதாரம் எது?
**இராம அவதாரம்**

(195) தஸாவதாரத்தில் சிங்க முகத்தினையும், மனித உடலையும் எடுத்துக் கொண்ட அவதாரம் எது?
**நரசிம்ம அவதாரம்**



(196) ஜாதிஹஸ்தத்தில் ஒன்றான பிராமண ஹஸ்தத்தினை எடுத்துக் கொள்ளும் நவக்கிரக ஹஸ்தம் ஒன்றினைத் தருக?
**குரு**

(197) தேவர்களுள் சமுத்திரத்திற்குரியவர் எனப்போற்றப்படும் கடவுள் யார்?
**வருணன்**

(198) எருதை வாகனமாக கொள்ளும் இறைவன் யார்? இக்கடவுளின் தொழில் என்ன?
**சிவன், அழித்தல் தொழில்**

(199) படைத்தல் தொழில் புரியும் இறைவன் யார்? இவரின் தந்தை பெயரைத் தருக?
**பிரம்மா, தந்தை பெயர் தக்கன்**

(200) மன்மத ஹஸ்தத்தில் உள்ள வலது கை கடகா முகத்தினை பதாகமாக மாற்றினால் உருவாகும் தேவஹஸ்தம் எது?
**வருணன்**

(201) மகாபாரதத்தில் மகாவிஷ்ணுவினால் எடுக்கப்பட்ட அவதாரம் எது?
**கிருஷ்ண அவதாரம்**

(202) இரணியனின் அகந்தையினை அழிக்க மகாவிஷ்ணுவால் எடுக்கப்பட்ட அவதாரத்தினையும், அதற்குரிய ஹஸ்தத்தினையும் தருக?
**நரசிம்ம அவதாரம்**
**முத்திரை:- வலது - திரிப்பதாகம்**
**இடது - சிம்ஹமுகம்**

(203) நவக்கிரக ஹஸ்தங்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
**ஒன்பது வகைப்படும்.**
**அவையாவன:-**

| | |
|---|---|
| **1. சூரியன்** | **6. வெள்ளி** |
| **2. சந்திரன்** | **7. சனி** |
| **3. செவ்வாய்** | **8. ராகு** |
| **4. புதன்** | **9. கேது** |
| **5. வியாழன்** | |

(204) "சூரஸ்வராஜஸ்ச சுளுபாக்ஷ" என ஆரம்பிக்கும் ஸ்லோகம் எது?
**கிண்கிணி இலட்சணம்**

(205) பிரகலாதனைக் காக்க விஷ்ணு எடுத்துக்கொண்ட அவதாரம் எது?
**நரசிம்ம அவதாரம்**

(206) இரு கைகளிலும் ஒரே முத்திரையினைக் கொண்டமையும் அவதாரங்களையும், அவற்றுக்குரிய முத்திரைகளையும் தருக?

| | அவதாரங்கள் | | முத்திரைகள் |
|---|---|---|---|
| 1. | மத்ஸ்ய | - | அர்தசந்திரன் |
| 2. | கூர்ம | - | மிருகசீர்ஷம் |
| 3. | வராஹ | - | மிருகசீர்ஷம் |
| 4. | நரசிம்ஹ | - | சிம்கமுகம் |
| 5. | வாமன | - | முஷ்டி |
| 6. | கிருஷ்ண | - | மிருகசீர்ஷம் |

(207) நரகாசுரனை அழித்ததற்காக கொண்டாடப்படும் விழா எது?
**தீபாவளி**

(208) குபேர ஹஸ்தத்தின் வலது முஷ்டி அப்படியே இருக்க இடது அலபத்மத்தை சூசியாக மாற்றினால் உருவாகும் நவக்கிரக ஹஸ்தம் எது?
**புதன்**

(209) வலது - சிகரம், இடது - பதாகம் ஆகிய முத்திரைகளை எடுத்துக் கொள்ளும் ஜாதி ஹஸ்தம் எது?
**சத்திரியர்**

(210) குறிப்பட்ட ஒரு நவக்கிரஹ ஹஸ்தத்தின் வலது, இடது கைகளை மாற்றிப் பிரயோகித்தால் உருவாகும் தேவ ஹஸ்தம் எது?
**முருகன்**

(211) மகாவிஷ்ணு எடுத்த கிருஷ்ண அவதாரத்தில் கிருஷ்ணன் பிறந்த இடம் எது? வளர்ந்த இடம் எது?
**பிறந்த இடம் - சிறைச்சாலை**
**வளர்ந்த இடம் - ஆயர்பாடி**

(212) கிருஷ்ணனைப் பெற்ற தாய், தந்தையின் பெயரினைத் தருக?
**தாய் - தேவகி**
**தந்தை - வாசுதேவன்**



(213) கிருஷ்ணனை வளர்த்த தாய், தந்தையின் பெயரினைத் தருக?
**தாய் - யசோதா**
**தந்தை - நந்த கோபாலன்**

(214) சங்கீதத்தில் பாவிக்கப்படும் குறியீடுகளில் மத்திம துரித காலத்தினைக் காட்ட உபயோகிக்கப்படும் குறியீடுகளைத் தருக?
— , ═══

(215) ஆவர்த்தன முடிவினைக் காட்டும் குறியீட்டினைத் தந்து, ஓர் ஆவர்த்தனம் என்றால் என்ன எனக் கூறுக ?
**ஆவர்த்தன முடிவு குறியீடு : -||**
**ஒரு தாளத்தில் இடம் பெறவேண்டிய அங்கங்களைச் சொல்லப்பட்ட விதி முறைகளுக்கு ஏற்ப ஒரு தடவை செயற்படுத்தல் ஓர் ஆவர்த்தனம் எனப்படும்.**

(216) சங்கீத குறியீடுகளில் துரித காலத்தையும், சாப்பு தாளங்களின் அங்க வேறுபாட்டினையும் காட்ட பயன்படும் பொதுவான குறியீட்டினைத் தருக?
═══

## ஆண்டு - 11

(217) அருணாசலக் கவிராயர் எப்போது எங்கு பிறந்தர்?
**மயூரத்தை அடுத்துள்ள தில்லையடி என்னும் ஊரில் கி.பி. ~~1972~~ 1712 ஆம் ஆண்டு பிறந்தார்**

(218) “தமிழிசையின் மும்மணிகள்” என அறிஞர் பலராலும் போற்றப்படுபவர் யார்?
**1. முத்துத்தாண்டவர்**
**2. மாரிமுத்துப் பிள்ளை**
**3. அருணாசலக் கவிராயர்**

(219) கம்பர் இராமாயணத்தை தமிழ் செய்யுளாக எங்கு அரங்கேற்றம் செய்தார்?
**திருவரங்கத்தில்**

(220) அருணாசலக் கவிராயர் எத்தனையாம் வயதில், எவ்வாண்டு இறைவனடி சேர்ந்தார்?
**தனது 67ஆம் வயதில் கி.பி. 1779 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.**

(221) "அபிநய தர்பணம்" என்னும் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?
**ஆனந்த குமாரசாமி**

(222) நடராஜ திரு உருவத்தில் முக்கண்கள் குறித்து நிற்பது எதனை?
**சூரியன் - வலது கண்**
**சந்திரன் - இடது கண்**
**அக்கினி - நெற்றிக் கண்**

(223) அருணாசலக் கவிராயரின் தந்தை, தாய் பெயரினைத் தருக?
**தந்தை - நல்லதம்பிப்பிள்ளை**
**தாய் - வள்ளியம்மை**

(224) பரத நாட்டிய நிகழ்ச்சியின் போது "பெண் வேடம்" பூண்டு பார்வையாளரின் பாராட்டினைப் பெற்ற இந்தியாவின் பழம்பெரும் நடனக் கலைஞர் யார்?
**ஈ. கிருஷ்ண ஐயர்**

(225) மட்டக்களப்பு பிரதேசத்தின் நடனமான நாட்டுக்கூத்தில் சபையோர் எனப்படுபவர் யார்?
**கூத்தினைப் பழக்கும் அண்ணாவியார், மத்தளம் அடிக்கும் அண்ணாவியார், ஏடு படிப்போர், பக்கப்பாட்டுப் பாடுவோர் ஆகிய நால்வரும் சபையோர் எனப்படுவர்.**

(226) "நாட்டுக் கூத்து" என்னும் நடனத்தில் இடம்பெறும் "இலங்கக் கூடம்", "களரி" என்னும் சொற்களுக்கு விளக்கம் தருக?
**"இலங்கக்கூடம்" என்பது கூத்து இடம் பெறும் ஓலைக்கொட்டில் ஆகும். "களரி" என்பது கூத்தாடும் இரங்கு ஆகுதம். இது வட்டவடிவமாதாக இருக்கும்**

(227) தேவலோகத்து நடன மாதர் மூவரின் பெயரினைத் தருக?
**1. ரம்பை 2. ஊர்வசி 3. மேனகை**

(228) "தட்டுமெட்டடவின்" போது பிரயோகிக்கப்படும் மண்டல பேதத் தினைத் தருக?
**ஆலிடம்**

(229) இருகைளிலும் மயூர ஹஸ்தம் பிரயோகிக்கப்படும் பாந்தவ ஹஸ்தம் எது ?
**அண்ணன், தம்பி**



30) இசைக் கச்சேரிகளிலும், பரத நாட்டியக் கச்சேரிகளிலும் பொதுவாக இடம் பெறும் உருப்படியினைத் தருக?
**தில்லானா**

(231) ராதை, கிருஷ்ணன், தோழி என் போரை கதாப்பாத்திரங்களாக எடுத்துக் கொள்ளும் நடன உருப்படி எது?
**"அஷ்டபதி" என்னும் உருப்படி**

(232) எவ் உருப்படி பரமாத்மா, ஜீவாத்மா தத்துவத்தை தலைவன் தலைவி வாயிலாகப் புலப்படுத்துகின்றது?
**"பதம்" என்னும் உருப்படி**

(233) ஸ்வரங்கள் எத்தனை வகைப்படும்? அவற்றினைத் தருக?
**ஸ்வரங்கள் ஏழுவகைப்படும்**
**அவையாவன :- ஸ, ரி, க, ம, ப, த, நி**

(234) திஸ்ரமும், சதுஸ்ரமும் சேரும் போது உண்டாகும் ஜதினைத் தருக?
**மிஸ்ரஜதி**

(235) பாசஹஸ்தம் பிரயோகித்துப் பின்னர் மிருகசீர்ஷ ஹஸ்தங்களை எடுத்துக் கொள்ளும் பாந்தவஹஸ்தம் எது?
**சக்களத்தி**

(236) சோழர் காலத்தில் நடனத்தில் சிறந்து விளங்கியவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட பட்டத்தினைத் தருக?
**"தலைக் கோலி" பட்டம்**

(237) சிவன் ஆடிய தாண்டவங்கள் எத்தனை?
**108**

(238) "தஞ்சைப் பெருவுடையார் பேரிகை" என்னும் நூலை எழுதியவர் யார்?
**க.பொன்னையாப் பிள்ளை**

(239) "இராமாயணம்" என்னும் காப்பியத்தை வடமொழியில் இயற்றியவர் யார்? அதனை தமிழில் மொழி பெயர்தவர் யார்?
**இயற்றியவர் :- வான்மிகி, தமிழில் மொழி பெயர்த்தவர்:- கம்பர்**

(240) பஞ்சநடை அடவுகள் எத்தனை வகைப்படும்?
**ஐந்து வகைப்படும்**

(241) பஞ்ச நடை அடவுகளின் மறு பெயர் என்ன?
**தட்டுமெட்டடவு**

(242) மண்டல பேதங்கள் எத்தனை வகைப்படும்?
**பத்து வகைப்படும்**

(243) கோபரஸம் எந்த நிறத்தைக் கொண்டது?
**சிவப்பு**

(244) பஞ்ச பாணங்கள் என்றால் என்ன?
**மன்மதனின் ஐந்து வகை மலரம்புகள்**

(245) பஞ்ச கிருத்தியங்களை உணர்த்தும் இறைவனின் தாண்டவம் எது?
**ஆனந்த தாண்டவம்**

(246) இறைவன் நிகழ்த்தும் பஞ்சகிருத்தியங்கள் எவை?
**1. படைத்தல்** **4. அருளல்**
**2. காத்தல்** **5. மறைத்தல்**
**3. அழித்தல்**

(247) ஏழு தந்திகளை உடைய நரம்பு வாத்தியம் எது?
**வீணை**

(248) காரைக்கால் அம்மையாரின் சரித்திரத்தினை இசை வடிவமாக்கிய வாக்கியகாரரின் பெயரினைத் தருக?
**கோபாலகிருஷ்ண பாரதியார்**

(249) நவரசங்கள் எத்தனை வகைப்படும்? அவற்றினைத் தருக?
**9 வகைப்படும்.**
**அவையாவன:-**

| | | |
|---|---|---|
| **1. சிருங்காரம்** | **4. ரௌத்திரம்** | **7. பீபத்ஸம்** |
| **2. ஹாஸ்யம்** | **5. வீரம்** | **8. அற்புதம்** |
| **3. கருணா** | **6. பயாநகம்** | **9. சாந்தம்** |

(250) நடனமங்கை சூரிய, சந்திர பிறைகளை அணிய வேண்டிய பக்கங்களைத் தருக?
**சூரியபிறை - வலதுபக்கம்**
**சந்திரபிறை - இடது பக்கம்**

(251) மேலைத் தேசத்தவரால் பின்பற்றப்படும் நடனங்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
**2 வகைப்படும்.**
**அவையாவன:- 1. சாஸ்திரீய நடனம் 2. புதிய நடனம்**



(252) தென் இந்திய வரலாற்று காலத்தில் நாட்டியக் கலை மிகவும் சிறப்புற்று எக்காலத்தில் காணப்பட்டது?
**சோழர் காலத்தில்**

(253) சோழ மன்னர்களுள் எம் மன்னன் நாட்டியக் கலையின் வளர்ச்சியினை ஊக்குவித்தான்?
**1ம் இராஜராஜசோழன்**

(254) சிவனின் 108 கரணச்சிற்பங்களும் எத் தலத்தில் எங்கு சிற்பவடிவமாக இடம் பெற்றுள்ளது?
**சிதம்பரம் கோயிலின் கோபுரத்தில்**

(255) பஞ்ச நடைகளைத் தருக?
**1. திஸ்ர நடை** **4. மிஸ்ர நடை**
**2. சதுஸ்ர நடை** **5. சங்கீர்ண நடை**
**3. கண்ட நடை**

(256) பரத நாட்டியத்தில் இடம் பெறும் முக்கியமான பாத பேதங்கள் எத்தனை வகைப்படும்? அவற்றினைத் தருக?
**நான்கு வகைப்படும்**
**அவையாவன:-** **1. மண்டலம்** **3. பிரமரீ**
**2. உத்பிளவனம்** **4. பாதசாரிகா**

(257) மிஸ்ர நடையில் இருந்து திஸ்ர நடைக்குரிய சொற்கட்டினை கழித்தால் வரும் நடை எது?
**கண்ட நடை**

(258) பலமண்டலங்களும், முத்திரைகளும் சேர்ந்து உண்டாவது எது?
**கோர்வை**

(259) மண்டல பேதங்கள் எத்தனை வகைப்படும்? அவற்றினை தருக?
**மண்டல பேதங்கள் பத்து வகைப்படும்.**
**அவையாவன:-**

| | |
|---|---|
| **1. ஸ்தானகம்** | **6. ப்ரேரிதம்** |
| **2. ஆயத்தம்** | **7. ஸ்வஸ்திகம்** |
| **3. ஆலிதம்** | **8. மோடிதம்** |
| **4. ப்ரத்யாலிதம்** | **9. சமசூச்சி** |
| **5. பிரேங்கனம்** | **10. பார்வசூச்சி** |

(260) "லயம்" என்றால் என்ன?

**தாளதசப்பிராணன்களில் எட்டாவதாக இடம் பெறுவது. இது மாறுபாடடையக் கூடியது. அதாவது இசையின் வேகத்தினையும் தாளத்தின் வேகத்தினையும் குறிக்கும்**

(261) "லயம்" என்பதன் மறு பெயர்களைத் தருக?

**1. ர்ரதம் 2. வேகம் 3. விரைவு**

(262) தாளதசப் பிராணன்களில் ஒன்றான "லயம்" எத்தனை வகைப்படும்? அவை எவை?

**மூன்று வகைப்படும்.**

**அவையாவன:-**

**1. விளம்பம் 2. மத்திமம் 3. துரிதம்**

(263) மனித உடலில் காணப்படும் திரியாங்கங்கள் எத்தனை வகைப்படும்? அவற்றினைத் தருக?

**மூன்று வகைப்படும்.**

**அவையாவன:-**

**1. அங்கம் 2. உபாங்கம் 3. பிரதியாங்கம்**

(264) "தகதகிட" என்ற இச் சொற்கட்டு என்ன நடையில் அமைந்துள்ளது?

**கண்ட நடையில் அமைந்துள்ளது**

(265) கோர்வைகளின் இறுதியில் இடம் பெறும் சொற்கட்டு எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும்?

**1. கிடதகதரிகிடதொம் 2. ததிகிணதொம் என்பவற்றைக் கொண்டு**

(266) நடராஜன் வலது பாதம் தூக்கிய நிலையில் ஆடப்படும் தாண்டவம் எங்கு காணப்படுகின்றது?

**மதுரையில் வெள்ளியம்பலத்தில்**

(267) சிவனால் ஆனந்த தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம் ஆடப்பட்ட சபைகள் எவை?

**சிதம்பரம் கனகசபை, இரத்தின சபை**

(268) சிவனின் ஐந்தொழில்களில் மறைத்தல் தொழிலைக் குறிக்கும் தாண்டவம் எது?

**திரிபுர தாண்டவம்**



(269) சிவன் சம்ஹார தாண்டவத்தினை எங்கு நிகழ்த்தினார்? இத் தாண்டவம் ஐந்தொழில்களில் எதனைக் குறிக்கின்றது?

**சம்ஹார தாண்டவம் நிகழ்த்திய இடம் சுடுகாடு, அழித்தல் தொழிலைக் குறிக்கும்**

(270) நடனக் கலைக்கு சேவையாற்றிய "ஸ்ரீமதி ருக்மணி தேவி அருண் டேல்" அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட நாட்டிய நிறுவனம் எது?

**கலாஷேஸ்திரம்**

(271) மன்மதனின் மலரம்புகள் பாய்ந்த மாத்திரத்தில் காதலருக்கு ஏற்படும் அவஸ்தையின் எண்ணிக்கையினைக் குறிப்பிடுக?

**பத்து**

(272) நடராஜப்பெருமானின் தூக்கிய திருவடியின் பாதநிலையினைத் தருக?

**குஞ்சிதபாதம்**

(273) "யவக் ஸ்திரத்துவம் ரேக்கா" என ஆரம்பிக்கும் ஸ்லோகம் எதனைப் பற்றிக் கூறுகின்றது?

**ஒரு நாட்டியப் பெண் கொண்டிருக்க வேண்டிய பண்புகளைக் கூறுகின்றது. அதாவது பாத்திர பிராணன்களை**

(274) "ஆசியே நாலம்பையேத் கீதம்" என ஆரம்பிக்கும்ஸ்லோகம் எதனைப் பற்றிக் கூறுகின்றது?

**ஒரு நாட்டியப் பெண் கொண்டிருக்க வேண்டிய திறமைகளைப் பற்றிக் கூறுகின்றது**

(275) "நாட்டியப்பிராணன்" ஒரு நாட்டியப் பெண் கொண்டிருக்க வேண்டிய திறமைகள் எவை எனக் கூறுகின்றது?

**1. நாட்டியப் பெண் பாடக்கூடியவளாக இருத்தல் வேண்டும்**

**2. கருத்துக்களைக் கைகளினால் வெளிப்படுத்தக் கூடியவளாக இருத்தல் வேண்டும்**

**3. கண்களினால் பாவத்தை வெளிப்படுத்தக் கூடியவளாக இருத்தல் வேண்டும்**

**4. கால்களினால் தாளத்தை வெளிப்படுத்தக் கூடியவளாக இருத்தல் வேண்டும்**

(276) "உத்பிளவனம்" என்னும் பாத பேதத்திற்குரிய சொற்கட்டினைத் தருக?

**தளாங்கு தொம்**

(277) சப்த தாளங்களுள் மிகவும் அட்சரம் கூடிய, அட்சரம் குறைந்த தாளங்களைத் தருக?

**அட்சரம் கூடிய தாளம்:- துருவதாளம்**

**அட்சரம் குறைந்த தாளம் :- ஏகதாளம்**

(278) சப்ததாளங்களில் தாளத்தின் மூன்று அங்கங்களான திரியாங்கங்கள் காணப்படும் தாளம் எது?

**ஜெம்பை தாளம்**

(279) சப்ததாளங்களில் தாளத்தின் மூன்று அங்கங்களில் ஒன்றான லகு மட்டும் காணப்படும் தாளம் எது?

**ஏகதாளம்**

(280) தாளத்தின் திரியாங்கங்கள் எவை?

**1. லகு**

**2. திருதம்**

**3. அனுதிருதம்**

(281) லகு, திருதம், அனுதிருதம் என்பவற்றின் மறு பெயர்களை தருக?

**லகு - கணை**

**திருதம் - மதி**

**அனுதிருதம் - பிறை**

(282) துருவ தாளத்தின் இறுதி லகுவை நீக்கினால் உருவாகும் தாளம் எது?

**மட்டிய தாளம்**

(283) "சப்தம்" என்னும் உருப்படியின் முதலாவது கண்டிகை அமைந்துள்ள ராகம் எது?


**காம்போதி**

(284) பாத்திர அந்தப் பிராணன்கள் எத்தனை வகைப்படும்? அவற்றினைத் தருக?

**பாத்திர அந்தப் பிராணன்கள் பத்து வகைப்படும்.**

**அவையாவன:-**

| | |
|---|---|
| **1. விரைவு** | **6. களைப்பின்மை** |
| **2. உறுதி** | **7. புத்திக் கூர்மை** |
| **3. சரியான நிலை** | **8. ஆர்வம்** |
| **4. சுற்றிவரும் அசைவு** | **9. பேசும் தன்மை** |
| **5. கண் அசைவுகள்** | **10. பாடும் தன்மை** |











Typesetted & Printed By :

**TelePrint (Pvt) Ltd.**

*22-1/1, Galle Road, Dehiwela. Tel : 739421*